# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-1** **தேதி:-22.05.2017**

### உற்சாகமாக நடைபெற்ற 8வது தமிழ் மாநில மாநாடு

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் 8வது தமிழ் மாநில மாநாடு ஈரோடு பெருந்துறை ரோட்டில் உள்ள சங்கர் மஹாலில் மே, 19 மற்றும் 20 தேதிகளில் உற்சாகமாக நடைபெற்றது. நமது அகில இந்திய உதவி பொது செயலாளரும், தமிழ் மாநில தலைவருமான தோழர் S.செல்லப்பா தலைமையில் தோழர் D.J.J.பெத்தல்ராஜ் நினைவரங்கில் தமிழ் மாநில மாநாடு நடைபெற்றது.

மே 19 காலை மிகச்சரியாக பத்து மணிக்கு நமது தேசியக்கொடியினை தமிழ் மாநில சங்கத்தின் துணைத்தலைவர் தோழர் C.சுவாமிகுருநாதன் ஏற்றி வைக்க நமது சங்கக் கொடியினை தமிழ் மாநில துணைத்தலைவர் தோழர் V.வெங்கட்ராமன் ஏற்றி வைத்தார். ஈரோடு மாவட்ட உதவி செயலாளர் தோழர் C.மணி மற்றும் நாகர்கோவில் மாவட்ட செயலாளர் தோழர் P.ராஜு ஆகியோரின் அற்புதமான உணர்ச்சி மிகு கோஷங்களுக்கு இடையே தோழர்கள் தியாகிகளின் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் மாநாட்டு அரங்கினுள் நுழைந்தனர்.

தமிழ் மாநில துணைத்தலைவர் தோழர் S.ஜான் போர்ஜியா அவர்களின் அஞ்சலி உரைக்கு பின் 8வது தமிழ் மாநில மாநாடு தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியது. வரவேற்புக் குழுவின் தலைவரும் ஈரோடு மாருதி மெடிகல் சென்டரின் உரிமையாளருமான மருத்துவர் M.N. சதாசிவம் அவர்கள் தவிர்க்க இயலாத காரணத்தால் வர இயலாததால் அந்நிறுவனத்தின் துணைத்தலைவர் மருத்துவர் P.சுந்தரவேலு அவர்கள் பங்கேற்று மாநாட்டு சார்பாளர்களையும் தலைவர்களையும் வரவேற்று பேசினார். வரவேற்புக் குழுவின் பொது செயலாளரும், ஈரோடு மாவட்ட செயலாளருமான தோழர் L.பரமேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தமிழ் மாநில மாநாட்டின் தலைவர் தோழர் S.செல்லப்பா தனது தலைமையுரையில் உலக மயமாக்கல் கொள்கைகளின் விளைவுகளை எதிர்த்து சர்வதேச அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்களையும் நமது இந்திய நாட்டில் நாம் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை மற்றும் போராட்டங்களை முன்னெடுத்து செல்வது தொடர்பாகவும் விளக்கி பேசினார்.

8வது தமிழ்மாநில மாநாட்டை நமது அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர் P.அபிமன்யு கம்பீரமாக துவக்கி வைத்து உரையாற்றினார். இவர் தனது துவக்க உரையில், மத்திய அரசாங்கத்தின் தவறான பொதுத்துறை விரோத - பெருமுதலாளித்துவ ஆதரவு கொள்கைகள் தொடர்பாகவும், BSNL நிறுவனத்தை காப்பாற்ற BSNL ஊழியர் சங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும், புதிய ஊதியமாற்றம் உள்ளிட்ட ஊழியர்களின் பிரச்சனைகள் தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைத்தார்.

மதிய உணவு இடைவேளைக்கு பின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் மாநில மாநாட்டின் செயல்பாட்டு அறிக்கையினை விரிவாக அறிமுகம் செய்து வைத்து உரை நிகழ்த்தினார். அதன் பின்னர் சார்பாளர்கள் விவாதம் தொடங்கியது.

**கருத்தாழம் மிக்க கருத்தரங்கம்**:- 19.05.2017 அன்று மாலை 05.00 மணி அளவில் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கத்தினை மாநில தலைவர் தோழர் S.செல்லப்பா தலைமை தாங்கினார். வரவேற்புக் குழுவின் துணைத்தலைவர் மருத்துவர் L.V.சண்முகநாதன் மற்றும் மாநில செயலாளர் தோழர் A..பாபு ராதாகிருஷ்ணன் ஆகியோர் BSNLன் புத்தாக்கம் தொடர்பான அவசியம்

குறித்து எடுத்துரைத்து வந்திருந்த அனைவரையும் வரவேற்றனர். இந்த கருத்தரங்கத்தில் தோழர் P.அபிமன்யு GS BSNLEU, திருமதி N.பூங்குழலி ITS CGM தமிழ்நாடு, திரு P.V.கருணாநிதி ITS PGM(CFA), தோழர் K.நடராஜன் CS NFTE, தோழர் M.கன்னியப்பன் CS BSNLEU CHTD, தோழர் R.ராஜசேகர் CS SNEA, தோழர் R.கருமலையான் Dy.GS CITU, தோழர் C.K. நரசிம்மன் CS AIBDPA தோழர் C. வினோத்குமார் CS TNTCWU மற்றும் தோழர் P.இந்திரா அமைப்பாளர் BSNL WWCC ஆகியோர் தங்களின் கருத்துக்களை மிகச்சிறப்பாக எடுத்துரைத்தனர். திருமதி N.பூங்குழலி ITS அவர்கள் பேசுகையில் கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டு வருவாய் தமிழகத்தில் அதிகரித்துள்ளதாகவும் அதற்கு நமது சங்கங்கள் நடத்திய இயக்கங்கள் முக்கிய பங்காற்றியது எனவும் தெரிவித்தார். நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் உரையாற்றுகையில் BSNL நிறுவனத்தை நலிவடையச் செய்ய அரசாங்கம் எடுத்த முயற்சிகளையும், BSNL ஊழியர் சங்கம் அதனை ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் ஒற்றுமை கொண்டு தடுத்து நிறுத்தி வருவது தொடர்பாகவும், சேவையை மேம்படுத்த நாம் எடுக்க வேண்டிய முயற்சிகள் தொடர்பாகவும் விர்வாக எடுத்துரைத்தார். அதே போல், BSNL நிறுவனத்தில் மிக மோசமாக நடத்தப்பட்டு கொண்டுள்ள ஒப்பந்த் தொழிலாளர்களுக்காக நம் நடத்தும் இயக்கங்களை சுட்டிக் காட்டியுள்ள அவர் தனது உரையில் ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனையில் தமிழ் மாநில நிர்வாகம் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இறுதியில் தமிழ் மாநில அமைப்பு செயலாளர் தோழர் V.மணியன் நன்றி கூறி இந்த கருத்தரங்கத்தை முடித்து வைத்தார்.

**வாழ்த்துரை**:- மறு நாள் நடைபெற்ற சார்பாளர்களின் விவாதங்களுக்கு இடையே தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் தலைவர் தோழர் P.சம்பத் வாழ்த்துரை வழங்கினார். இந்திய நாட்டில் உழைக்கும் மக்களின் கோரிக்கைகளுக்காக நடைபெறும் இயக்கங்களை சீர்குலைக்க நினைக்கும் சாதி, மத, இன மொழி சக்திகளிலிருந்து உழைக்கும் மக்கள் விடுபட்டு ஒன்று பட்டு நிற்க வேண்டும் என வலியுறுத்திய அவர் இன்று மதத்தின் பெயரால் நடைபெறும் அட்டூழியங்களை சுட்டிக் காட்டினார். மேலும் இந்திய நாட்டில் நிலவும் தீண்டாமைக் கொடுமையை ஒட்டு மொத்தமாக ஒழிக்க வேண்டுமென்றும் அதற்காக தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் முன்னணி பாத்திரத்தை BSNL ஊழியர் சங்கம் வகிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் அகில இந்திய அமைப்பான தலீத் சோஷன் முக்தி மோர்சாவின் அகில இந்திய மாநாட்டை தமிழகத்தில் நடத்துவது என ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டுள்ளதையும் அவர் விவரித்தார். அதற்கான நிதியை தோழர்கள் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அவரது உரைக்கு பின் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் 1000 ரூபாயை நன்கொடையாக வழங்கி நிதி வசூலை துவங்கி வைத்தார். அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா, மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன், BSNLWWCC அமைப்பாளர் தோழர் P.இந்திரா உள்ளிட்ட தலைவர்கள் சார்பாளர்கள் மத்தியில் துண்டேந்தி வந்தனர். சார்பாளர்களிடம் வசூலான 19,390/- ரூபாயுடன் வரவேற்புக் குழு வழங்கிய 610/- ரூபாயை சேர்த்து முதல் தவணையாக ரூ.20,000/-ஐ நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் தலைவர் தோழர் P.சம்பத் அவர்களிடம் வழங்கினார்.

**நிறைவுரை**:- மாலை வரை நடைபெற்ற சார்பாளர்களின் விவாதங்களுக்கு பின் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் நிறைவுரை ஆற்றினார். விவாதங்களில் தோழர்கள் கேட்ட பல்வேறு சந்தேகங்களுக்கு விளக்கங்களை கொடுத்ததுடன் நமது எதிர்கால செயல்பாடுகளுக்கு வழிகாட்டும் வகையிலும் அவரது நிறைவுரை இருந்தது.

அவரது நிறைவுரைக்கு பின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் தோழர்கள் விவாதங்களில் எழுப்பிய பல்வேறு பிரச்சனைகளுக்கு விளக்கங்களை கொடுத்து தொகுப்புரை வழங்கினார். தொகுப்புரைக்கு பின் செயல்பாட்டு அறிக்கையினையும், 2014, 2015 மற்றும் 2016ஆம்

ஆண்டுகளுக்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு அறிக்கைகளையும் 8வது தமிழ் மாநில மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

தகுதி ஆய்வுக் குழுவின் அறிக்கையினை அந்தக் குழுவின் தலைவரான தமிழ் மாநில உதவி செயலாளர் தோழர் s.தமிழ்மணி சமர்பித்தார். அதனையும் தமிழ் மாநில மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. தீர்மானக் குழுவின் தலைவரான தமிழ் மாநில உதவி செயலாளர் தோழர் P.இந்திரா தீர்மானங்களை முன்மொழிய அவற்றையும் 8வது தமிழ் மாநில மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

**நிர்வாகிகள் தேர்வு:-** இறுதியாக BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் நிர்வாகிகள் தேர்வினை நடத்தினார். இந்த நிர்வாகிகள் தேர்வில் கீழ்கண்ட தோழர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| **மாநில தலைவர்** | **தோழர் S.செல்லப்பா OS** | **சென்னை** |
| மாநில துணை தலைவர்கள் | 1) தோழர் K.மாரிமுத்து TT | கோவை |
| | 2) தோழர் T.பிரேமா TT | சென்னை |
| | 3) தோழர் S.தமிழ்மணி OS | திருச்செங்கோடு |
| | 4) தோழர் P.சந்திரசேகரன் TT | போடி |
| | 5) தோழர் K.V..சிவக்குமரன் SA | சென்னை |
| **மாநில செயலர்** | **தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் AOS** | **சென்னை** |
| மாநில உதவிச்செயலர்கள் | 1) தோழர் M.முருகையா JE | சென்னை |
| | 2) தோழர் S.சுப்பிரமணியன் OS | திருப்பூர் |
| | 3) தோழர் P.இந்திரா OS | நாகர்கோவில் |
| | 4) தோழர் R.மெய்யப்பன் கிறிஸ்டோபர் OS | திருச்செந்தூர் |
| | 5) தோழர் M.பாபு TT | தர்மபுரி |
| **மாநில பொருளாளர்** | **தோழர் K.சீனிவாசன் TT** | **சென்னை** |
| மாநில உதவிபொருளாளர் | தோழர் G.சுந்தர்ராஜன் JE | திருச்சி |
| மாநில அமைப்புச்செயலர்கள் | 1) தோழர் V.மணியன் TT | ஈரோடு |
| | 2) தோழர் K.பழனிக்குமார் OS | பழனி |
| | 3) தோழர் A.சமுத்திரகனி TT | சிவகாசி |
| | 4) தோழர் P.ரிச்சர்ட் JE | மதுரை |
| | 5) தோழர் N.P.ராஜேந்திரன் SOA | கோவை |
| | 6) தோழர் N.சக்திவேல் TT | உடுமலை |
| | 7) தோழர் V.சீதாலட்சுமி OS | திருநெல்வேலி |

உற்சாகமாக நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் 8வது தமிழ் மாநில மாநாட்டை தமிழ் மாநில உதவி செயலாளர் தோழர் M.முருகையா நன்றி கூறி முடித்து வைத்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,



**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**